கிறிஸ்துவே கடவுளிடமிருந்து நமக்கு வரும் ஞானம்

1கொரிந்தியர் 1:30

# ஞான ஒலி

இணைய வார இதழ்

ஞானம் 6 – ஒலி 06 | 12–02–2023

www.newwisdomministries.com




# எனக்குள் வருவது தரமாயிருக்க வேண்டும்



# சோதித்தறிதலே புத்தியை விருத்தியாக்கும்




**தலையங்கம்**

அருட்பணி. சைமன் பீட்டர்


இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் உங்கள் அனைவரைக்கும் என் நல்வாழ்த்துக்கள். ஞான ஒலியின் ஞானக்கதிர்கள் உங்கள் உள்ளத்தை நிரப்பி மெய்ஞானத்தில் வழிநடத்த உங்களை வாழ்த்துகின்றேன்.

எதையும் கூர்ந்து பார்த்து, தெள்ளத் தெளிவாக அறிந்து கொள்ளும் போதுமே நம் அறிவு முழுமையடையும். அத்தகைய அனுபவ அறிவே நம்மை அறிவார்ந்தவர்களாக்கும். நமது பார்வையும், அதனால் நாம் உள்வாங்கும் தரவுகளும், உண்மையாகவும், தரமாகவும் இருக்கமானால் நம் அறிவின் தரமும், மதிப்பும் கூடும். அப்படிப்பட்ட தரமே நம்மை அறிவு ஜீவிகளாக்கும்.

அத்தகைய அறிவுத் தேடலில் உணர்ச்சிக்கும், பதற்றத்திற்கும், அவசரத்திற்கும் இடமே இருக்காத பட்டச்சத்தில்தான் நாம் சேமிக்கும் தகவல்கள் தரமாயிருக்கும், தவறுகளுக்கு அப்பாற்பட்டதாயிருக்கும்.

நமது அறிவு நமது பொறுப்பு. நமது படிப்பறிவு, பட்டறிவு அனைத்தும் நமது பொறுப்புதான்.

நான் என்ன சொன்னாலும், அத அப்படியே எடுத்துக்காத, நான் சொல்றது சரியா, தப்பா என்று யோசி, சரியா இருந்தா அத எடுத்துக்க, எதையும் கேள்வி கேள்...என்பார் பகுத்தறிவுப் பகலவன் ஐயா பெரியார் அவர்கள்.

எதைச் சாப்பிடுகிறோம், எதைப் பார்க்கின்றோம், எதை நம்புகிறோம், எதைச் செய்கிறோம் என்று எதையும் உணர்ந்து செய்பவரே அறிவு ஜீவி.

வற்ப்புறுத்துவதற்காகவோ, காசு கொடுக்கின்றார்கள் என்பதற்காகவோ, அல்லது எதையாவது சாப்பிடவேண்டும், சொல்ல வேண்டும், என்பதற்காகவோ நாம் செய்யும் எதுவும் அறிவுத் தளத்திற்கு ஏற்றவையல்ல என்பது வெட்ட வெளிச்சம். மேலும் அதற்கு எந்தவித சமூக அங்கீகாரமும், மரியாதையும் கிடைக்காது. இவையெல்லாம் கீழ் மக்களின், தரமில்லாதவர்களின் செயல்கள் என்றே அவற்றை உதறித் தள்ளிவிடுவார்கள்.

நமது அறிவின் அடித்தளம் உண்மையாகவும், அர்த்தமுள்ளதாகவும், செறிவுமிக்கதாகவும், அறிவுக் களஞ்சியத்தின்

மீது கட்டப்பட்டதாகவும் இருந்தால் நம்மைக் கற்றோர் சபையில் சிம்மாசனம் இட்டு அமர வைப்பார்கள்.

ஒரு சிறு தகவலாக இருந்தாலும் அதன் தரம் சோதிக்கப்படவேண்டும். நமது ஐம்புலன்களை நமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க வேண்டும். அவைகள் நல்ல மதிப்பீடுகளின் அடிப்படையில் துவக்கத்திலேயே பயிற்றுவிக்கப்பட்டிருக்க வேண்டும். ஒரு கணினியின் செயல் திறனும், வடிவமும் , செயற்கை அறிவும் வடிவமைக்கப்டுகின்றதோ அதே போல நமது உடலும், மனமும், ஐம்புலன்களும், சிந்திக்கும் முறையும், தேர்ந்தெடுக்கும் முறையும் நல்ல மதிப்பீடுகளின் அடிப்படையில், விழுமியங்களின் வழியில் அமைந்திருந்தால், ஒரு மனிதனின் வாழ்வு ஒளியமயமாக இருக்கும். ஒருவனின் அறிவே அவனுக்கு மதிப்பைப் பெற்றுத் தரும்.

அதற்காகத்தான் தத்துவ ஞானி சாக்ரடீஸ் அவர்கள், உன் தரம் உயர வேண்டுமானால், உன் சிந்தனையைக் கவனி, அதன் தரத்தை உயர்த்து என்று சொல்வார்.

ஒருவன் குரூரமானவனாய் இருக்கின்றான் என்றால், மேல் சொன்ன அனைத்தும் அவனுக்கு அன்னியமாய் இருக்கும். எல்லாவற்றையும்விட அவன் மிகவும் பலவீனனாய், வீனனாய் இருப்பான். பலவீனமானவனின் செயல் அனைத்தும் வன்முறைச் செயலாய் இருக்கும். பிறரின் அழிவைத் தேடுபவனாய் இருப்பான். அதற்காக அவன் எந்தக் கவலையும் படமாட்டான்.

கடந்தபோன் வரலாற்றில் வாழ்ந்த இரத்த வெறி கொண்ட அனைத்து அரசர்களும், சர்வாதிகாரர்களும் கோழைகள், பலவீனமானவர்கள், பயந்தாங்கொள்ளிகள். தன்னிலே எந்தவித தார்மீக முதிர்ச்சியு மற்றவர்கள். தங்களுக்குள் சிதைவு மனம் கொண்ட பக்குவமுமற்றவர்கள்.

அவர்களைத் தற்காத்துக் கொள்ளவே விரும்புவார்ள். எதிரிகள் இல்லாதிருந்தால்தான் தங்களுக்குப் பாதுகாப்பு என்ற பதற்றத்திலேயே இப்பார்கள். சதாகாலமும் மற்றவரை அழிப்பதையே நினைத்திருப்பார்கள்.

ஆனால் மனித பிறவி அதற்கல்ல. மாறாக, தன்னிலை உணர்ந்து, தனக்குள் இருக்கும் ஆளுமைகளை வெளிக் கொணர்ந்து உலகை ஆளவேண்டும் என்பதே இறைப் படைப்பின் இரகசியம்.

அதற்கு ஒருவன் முதலில் செய்ய வேண்டியது தனக்குள்ளும், தன்னையும், தன்னைத் சுற்றியுள்ள அனைத்தையும் கூர்ந்து கவனித்து பிரபஞ்ச சக்திகளையும், அதன் செல்வங்களையும் தனக்குள் எடுத்துக் கொள்ள வேண்டும். தக்க வைத்துக் கொள்ளவேண்டும்.

எப்பொழுதும் விழிப்பாயிருந்து கற்றுக் கொண்டேயிருக்கும் ஒரு மனிதனே உலகை ஆளுவார். எங்கெங்கும் உள்ள அறிவுச் செல்வங்களைத் தேடித்தேடிக் கற்றிக் கொள்ள வேண்டும். இந்தத் தேடலும், படிப்பும் உயிர் உள்ளளவும் நடக்க வேண்டும். அதனால்தான் நம் முன்னோர்கள் திரைகடலோடியும் திரவியம் தேடு என்று சொன்னார்கள். ஒருவன் சதாகாலமும் அறிவுத் தேடலோடு இருந்தால், உலக ஞானம் நம் வாசலில் வந்து நமக்காகத் தவமிருக்கும்.

தகுதியானவர்களை நோக்கி பிரபஞ்ச அறிவும், ஞானமும் பெரு வெள்ளமாய் நம்மைத் தேடி வரும்.

நம் தேடல் முழுமையாக இருக்க வேண்டும். நமது அறிவுத் தாகத்தை முழு இதயத்தோடும், முழு உள்ளத்தோடும், முழு அறிவோடும், முழு ஆற்றலோடும் தேடினால், அந்த பிரபஞ்ச ஆறிவும் அதே அளவோடு, ஆர்வத்தோடு, வேகமாய் நம்மை வந்தடையும்.

நமது வாழ்வு ஏனோதானோ என்றிருந்தால், எல்லாமும் ஏனாதானோதான்.

ஒருமுறை ஒரு மருத்துவக் கல்லூரிப் பேராசிரியர், தன் வகுப்பு மாணவர்களை பிணவறைக்கு அழைத்துச் சொன்றார். அங்கே ஒரு மேசையில் ஒரு ஆணின் பிணம் கிடத்தப்பட்டிருந்தது. அதைச் சுற்றி மாணவர்கள் சூழ்ந்து நின்றார்கள். அப்போது எதையும் கூர்ந்து பார்த்து எதையும் கவனமாகச் செய்ய வேண்டும் என்று கற்றுத்தருவதே அன்றைய வகுப்பின் நோக்கம். மருத்துவத் துறையில் எதைச் செய்தாலும் விழிப்புணர்வோடு. எச்சரிக்கையோடு செய்ய வேண்டும் என்பதைக்

கற்றுத் தருவதற்காக அவர்களை அங்கு அந்தப் பேராசிரியர் அழைத்திருந்தார். அதுதான் அன்றைய வகுப்பில் நடத்தப்படவிருந்த பாடம்.

அந்தப் பேராசிரியர், தனது மருத்துவ மாணவர்களைப் பார்த்து, என்னை நன்றாகக் கவனியுங்கள் நான் என்ன செய்கின்றேனோ அதை நன்கு கவனித்து அதைப் போலவே நீங்களும் செய்ய வேண்டும் என்று சொல்லிட்டு, தனது வலது கையின் நடு விரலை அந்தப் பிணத்தின் வாயிக்குள் விட்டு இரண்டு முறை நன்றாக ஆட்டிவிட்டு தன் வாயில் வைத்து சப்பினார். அதைப் பார்த்த அந்த மாணவர்களுக்கு குமட்டிக் கொண்டு வந்தது, ஐயே, டாக்டர் என்ன இது? என்று கத்தினார்கள்.

அந்தப் பேராசிரியர், நான் செய்தது போலவே நீங்களும் ஒவ்வொருவராக வந்து செய்யுங்கள் என்று சொன்னார். மாணவர்கள் அனைவரும், மிரண்டு போய் சார் இதை எங்களால் செய்ய முடியாது என்று சொன்னார்கள்.

ஆனால் பேராசிரியரின் கண்டிப்பைத் தொடர்ந்து ஒவ்வொருவராக வந்தார்கள் தங்களின் வலது கை நடுவிரலை பிணத்தின் வாயில் விட்டு, பிறகு தங்களின் வாய்க்குள் வைத்து சப்பினார்கள்....இவ்வாறு செய்யதவர்கள் அனைவரும் வாந்தியெடுத்தார்கள்.

அப்போது அந்தப் பேராசிரியர்,அந்த மாணவர்களைப் பார்த்து,,..நான் செய்தது என்ன? நீங்கள் செய்வது என்ன? நீங்கள் நான் செய்ததை முழுமையாகக் கூர்ந்து கவனித்திருந்தீர்கள் என்றால், நீங்கள் இவ்வாறு செய்திருக்க மாட்டீர்கள்.

நான் எனது வலது கையின் நடுவிரலைத்தான் அந்தப் பிணத்தின் வாய்குள் விட்டு ஆட்டினேன், ஆனால், என் வாய்க்குள் என் வலது ஆள்காட்டி விரலை வைத்துத்தான் சப்பினேன்.

ஆனால் நீங்களோ வலது ஆள்காட்டி விரலை பிணத்தின் வாய்க்குள் விட்டீர்கள் அதையே உங்கள் வாயில் வைத்து சப்பினீர்கள். தவறு உங்களின் பார்வையிலும், கவனிப்பிலும்தான் என்று சொன்னாராம்.

அனைத்து மாணவர்களும் தங்களின் கவனக்குறைவு எவ்வளவு பெரிய தர்ம சங்கடத்தைத் தங்களுக்குக் கொடுத்தது என்று உணர்ந்தார்கள்.

தங்களது மருத்துவத் துறையில் விழிப்புணர்வும், கவனமும் எவ்வளவு முக்கியம், தவறினால் எவ்வளவு தவறாகப்போகும் என்ற படிப்பினையைக் அன்று அந்த மருத்துவ மாணவர்கள் கற்றுக் கொண்டார்கள்.

நமக்குள் அனுமதிக்கப்படும் எதையும் மிகக் கவனமாகப் பரிசோதிக்க வேண்டும். ஏனென்றால் அதுவே நமது ஆளுமையை உருவாக்கப் போகின்றது.

நமக்குள்ளும், நம்மைச் சுற்றியும் அனைத்தும் தரமானதாக அமைப்பது நம் கரத்தில்தான்.

**You’re braver than you believe,**
**and stronger than you seem,**
**and smarter than you think.**

**- A.A. Mine -**



# விவிலியம்

## அறிவோம்-77



அருட்பணி. ஆ. அலெக்ஸ் CMF

## லேவியர் நூல் தொடக்கவுரை

லேவியர் என்ற இந்த நூலின் பெயர் லேவியர்களைப் பற்றியது என்ற பொருள் கொண்ட லெயிட்டிக்கோஸ் (leuitikos) என்ற கிரேக்கப் பண்புத்தொகையின் மொழியாக்கம். எபிரேய விவிலியத்தில் இந்நூல் வாயிக்ரா (ழுழிதீதீஷ்ஆஷெழி) என்ற தலைப்பில் வருகிறது. இச்சொல்லுக்கு அவர் அவரை அழைத்து என்பது பொருள். இப்பொருளை அடிப்படையாகக் கொண்டு இந்நூலை அழைக்கப்பட்டவர் என்ற பெயரிலும் அழைக்கலாம். இந்த நூல் லேவியர்களான குருக்களின் வழிபாட்டு விதிகளை உட்பொருளாகக் கொண்டது. உதாரணமாக இந்நூலின் முதல் ஏழு பிரிவுகள் பலிகள் மற்றும் காணிக்கைகள் பற்றிப் பேசுகின்றன. எட்டு முதல் பத்து முடிய உள்ள பிரிவுகள் குருக்கள் திருநிலைப்படுத்தப்படுதல் பற்றிப் பேசுகின்றன. பதினொன்று முதல் 16 வரையுள்ள பிரிவுகள் தூய்மைச் சடங்குகள் பற்றிப் பேசுகின்றன. பதினேழு முதல் இருபத்தாறு வரையுள்ள பிரிவுகள் தூய்மை விதிகள் என அழைக்கப்படுகின்றன. இருபத்தேழாவது பிரிவு நேர்ச்சைகள் பற்றிப் பேசுகிறது. இந்த நூலின் மையக்கருத்து தூயோராய் இருங்கள். ஏனெனில் உங்கள் கடவுளும் ஆண்டவருமாகிய நான் தூயவர் (19:2) என்பதாகும். இந்நூல் யாவே கடவுளின் மகத்துவத்தையும் மாண்பையும் எடுத்துக்காட்டி அவரை மனிதர்கள் எப்படி வழிபடவேண்டும், அணுகவேண்டும் என்பதை தெளிவுபடுத்துகின்றது. இஸ்ரயேல் மக்கள் உடன்படிக்கையின் மக்கள்; யாவே கடவுளின் மக்கள். எனவே அவர்கள் தூய்மை வாழ்வு வாழ கடமைப்பட்டவர்கள். பொதுவாக லேவியர் நூல் மக்களால் அதிகமாக வாசிக்கப்படுவதில்லை; விவிலியத்தில் உள்ள நூல்களில் மக்களின் மனதில் இல்லாத ஒரு நூல் என்றுதான் இந்நூலைக் கூறவேண்டும். ஏனெனில் இந்நூல் ஒரு சட்ட நூல். இந்நூலில் பதிவுசெய்யப்பட்டுள்ள சட்டங்களை கிறிஸ்தவர்களாகிய நாம் பின்பற்றவேண்டும் என்ற கட்டாயமுமில்லை; ஆனால் ஒன்றை நாம் மறத்தலாகாது. இந்நூலில் வருகின்ற பலிகள், நேர்ச்சைகள், குருத்துவம், தூய்மை வழிபாடுகள் ஆகியவற்றை மையமாகக் கொண்ட ஒரு வாழ்க்கைச் சூழலில்தான் இயேசுவின் வாழ்வும் பணியும் அமைந்திருந்தது. மேலும் தொடக்கத் திருஅவையில் இயேசுவின் மீட்புச் செயல்களும் இந்தச் சூழலைப் பின்புலமாகக் கொண்டுதான் நிகழ்கின்றன. எனவே பழைய ஏற்பாட்டு நூல்களையும் புதிய ஏற்பாட்டு நூல்களையும் அறிந்துகொள்வதற்கு இந்நூலைக் கற்கவேண்டியது மிகவும் அவசியம்.

ஐந்நூல்களில்; லேவியர் நூலில் மட்டுமே வரலாற்றுப் பதிவுகள் குறைவு. இந்நூலில் இரண்டு வரலாற்றுப் பதிவுகள் மட்டுமே உள்ளன. முதலாவதாக, ஆரோனின் குருத்துவத் திருப்பொழிவு (லேவி 8-10). இரண்டாவதாக, கடவுளைப் பழித்தவன் ஒருவனுடைய செயலும் அவன் கல்லால் எறியப்பட்டு தண்டனை பெறுதலும் (லேவி 24:10-23). இவற்றைத் தவிர இந்நூலில் சட்டங்களும் விதிகளும் மட்டுமே அடங்கியுள்ளன. இந்நூலின் 26 வது பிரிவு ஆசிரையும் சாபங்களையும் உள்ளடக்கமாகக் கொண்டுள்ளது. இந்நூலில் வருகின்ற சட்டங்கள் மற்றும் விதிகள் அனைத்தும் கடவுளால் நேரடியாக மோசேயிடம் பேசப்படுவதாக அமைக்கப்பட்டுள்ளது. எனவே இந்நூலுக்கு ஒரு கட்டமைப்பு உள்ளது. கடவுள் 37 தடவைகள் மோசேயுடன் நேரடியாகப் பேசி சட்டங்களும்

விதிகளும் கொடுக்கப்படுவதாக அமைக்கப் பட்டுள்ளது. இந்த அமைப்பில் ஒரு தொடர்ச்சி உள்ளது. விடுதலைப் பயணம் நூல் திருஉறைவிடம் அமைக்கப்பட்டு அர்ச்சிக்கப்படுவதுடன் முடிவடைகிறது. லேவியர் நூல் கடவுள் திருஉறைவிடத்திலிருந்து மோசேயை அழைப்பதுடன் தொடங்குகிறது. இந்தத் தொடக்கம் சிறப்பு வாய்ந்தது; முக்கியமானது. ஏனெனில் திருஉறைவிடம் கடவுள் தன்னை வெளிப்படுத்தும் இடமாக மாறுகிறது. கடவுள் சீனாய் மலையில் தன்னை இஸ்ரயேல் மக்களுக்கு வெளிப்படுத்தினார். இப்போது திருஉறைவிடம் கடவுள் வெளிப்பாட்டின் மையமாக மாறுகிறது.

திருஉறைவிடத்தில் கடவுளுக்குப் பணிபுரிபவர்களாக குருக்கள் வருகிறார்கள். எனவே நூலின் முதல் பகுதி பலிகள் மற்றும் நேர்ச்சைகள் பற்றிப் பேசுவது முறையானது என்றே கருதவேண்டும். முதலில் அனைவரும் அறிந்த மூன்று விதமான பலிகள் பேசப்படுகின்றன. அவை முறையே, எரிபலிகள், தானியப் படையல்கள் மற்றும் நல்லுறவுக் காணிக்கைகள். அதைத் தொடர்ந்து திருஉறைவிடத்திற்கு உரித்தான பாவக்கழுவாய் காணிக்கைகள் மற்றும் குற்றநீக்க காணிக்கைகள் பற்றிப் பேசப்படுகின்றன. பலிகளையும் நேர்ச்சைகளையும் நிறைவேற்றுவதற்கு குருக்கள் அவசியம். எனவே இரண்டாவது பகுதியில் குருத்துவத் திருநிலைப்பாடு பற்றிப் பேசப்படுகிறது (லேவி 8-10). ஆரோன் திருநிலைப்படுத்தப்பட்டபின் வருகின்ற பிரிவுகள் அனைத்தும் தூயதற்கும் தூய்மையற்றதற்கும், தீட்டுள்ளதற்கும் தீட்டற்றதற்கும் உள்ள வேறுபாடுகளை விளக்கிக் கூறுகின்ற கட்டமைப்பைக் கொண்டதாக உள்ளன (லேவி 10:10-11). லேவியர் நூலின் பெரும்பாலான பகுதிகள் இந்த இரண்டிற்கும் இடையே உள்ள வித்தியாசத்தை வெளிப்படுத்துகின்றன. தூயதற்கும் தூய்மையற்றதற்கும் தீட்டுள்ளதற்கும் தீட்டற்றதற்கும் இடையே உள்ள வேறுபாடுகள் 11-16 வரையுள்ள பிரிவுகளில் காணக்கிடைக்கின்றன. இந்தப் பகுதி பாவக்கழுவாய் நிறைவேற்றும் நாள் பற்றிய பதிவுடன் நிறைவுபெறுகிறது. இஸ்ரயேல் மக்கள் சமூகத்தின் பாவங்கள் அனைத்தையும் போக்குகின்ற முதன்மையான நாள் இது. பாவக்கழுவாய் நிறைவேற்றும் நாள் மக்களின் பாவங்களைப் போக்குவதுடன் நின்றுவிடவில்லை மாறாக மக்களை மீண்டும் கடவுளுக்கு அர்ப்பணிக்கப்பட்டவர்களாக மாற்றுகிறது.

லேவியர் 17-26 வரையுள்ள பிரிவுகள் தூய்மை விதிகள் என அழைக்கப்படுகின்றன. இவற்றில் 17-25 வரையுள்ள பிரிவுகள் தூய்மை மற்றும் தீட்டு ஆகியவற்றை வேறுபடுத்திக் காட்டுகின்றன. இஸ்ரயேல் மக்கள் கொண்டாடுகின்ற விழாக்களில் மிகவும் புனிதமானதாகக் கருதப்பட்ட ஜீபிலி ஆண்டுடன் இப்பகுதி நிறைவுக்கு வருகிறது. லேவியர் 26 வது பிரிவு உடன்படிக்கைக்கு பிரமாணிக்கமாக இருப்பவர்களுக்கு ஆசிரையும் பிரமாணிக்கமற்றவர்களாகச் செயல்படுபவர்களுக்கு சாபங்களையும் கூறுகிறது. உடன்படிக்கை ஆவணத்தின் இறுதியில் ஆசிரும் சாபங்களும் பதிவுசெய்யப்படுவது விவிலியம் மற்றும் பண்டைய மேற்காசிய நாடுகளின் மரபாக இருந்தது. எனவே லேவி 26 உடன்படிக்கை ஆவணத்தின் இறுதிப்பகுதி எனக் கூறலாம். ஆனால் இதில் உள்ள ஒரு பிரச்சினை என்னவென்றால் இந்த உடன்படிக்கை ஆவணத்தின் தொடக்கம் எதுவெனத் திட்டமிட்டுக் கூறமுடியவில்லை. ஒருசில அறிஞர்களின் கருத்துப்படி லேவி 26 வது பிரிவை உடன்படிக்கை ஆவணத்தின் இறுதியுரையாகக் கருதினால் இஸ்ரயேல் மக்கள் பொற்கன்றுக் குட்டியை வழிபட்டு தங்களைத் தீட்டுப்படுத்திய நிகழ்வு இதன் தொடக்கமாகக் கருதப்படவேண்டும். ஏனெனில் அந்நிகழ்வுக்குப் பின் பலியிடும் குருக்கள் மாற்றப்படுகிறார்கள். லேவியர் மரபில் வருகின்ற ஆரோனும் அவரது வழிமரபினரும் குருக்களாகத்; திருநிலைப்படுத்தப்படுகின்றனர். ஏனைய பதினொரு குலங்களும் குருத்துவப் பணியிலிருந்து விலக்கப்படுகிறார்கள். லேவி 26 பொற்கன்றுக் குட்டியை வழிபட்டபிறகு செய்யப்பட்ட உடன்படிக்கைப் புதுப்பித்தலை நிறைவுக்கு கொண்டுவருகிறது. அதன்படி விடுதலைப் பயணம் மற்றும் லேவியர் நூல்களில் பதிவுசெய்யப்பட்டுள்ள விதிகள் அனைத்தும் உடன்படிக்கை விதிகளாக மாற்றம் பெறுகின்றன. இந்த விதிகளுக்குப் பிரமாணிக்கம் உள்ளவர்களாக இருப்பவர்கள் ஆசிர் பெற்றவர்களாகவும் இந்த விதிகளுக்குப் பிரமாணிக்கம் இல்லாமல் இருப்பவர்கள் சபிக்கப்பட்டவர்களாகவும் இருப்பார்கள். லேவியர் 27 வதுபிரிவு இந்நூலின் முடிவுரையாக வருகிறது. இப்பிரிவு ஆண்டவருக்கு தன்னிச்சையாகச் செய்யப்படும் நேர்ச்சைகள் மற்றும் வரிகள் பற்றிப் பேசுகின்றது. இந்தப் பிரிவு ஆசிர்கள் மற்றும் சாபங்கள் பிரிவிற்குப் பின் வருவதால் உடன்படிக்கை விதிகளோடு இணைந்தவை அல்ல. இவற்றைக் கடைபிடிப்பது ஆசிரையோ அல்லது மீறுவது சாபத்தையோ கொண்டுவராது.

ஐந்நூல்களில் வருகின்ற ஏனைய நூல்களைப்போல லேவியர் நூலும் கி.பி. ஆறாவது நூற்றாண்டில்தான் இறுதி வடிவம் பெற்றிருக்கவேண்டும். ஆனால் அதில் பதிவு செய்யப்பட்டுள்ள பல சட்டங்கள் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே பழக்கத்தில் இருந்தவையாக இருக்கலாம். லேவியர் நூலில்

வருகின்ற தூய்மை விதிகள் (லேவி 17-26) இறுதியாகத் தொகுக்கப்பட்ட சட்ட விதிகளாக இருக்கலாம். இந்த விதிகள் இஸ்ரயேல் மக்கள் பாபிலோனுக்கு நாடுகடத்தப்பட்டு வாழ்ந்த காலகட்டத்தில் (கி.மு. 587-538) அல்லது அதற்கும் சிறிது முன்பாக தொகுக்கப்பட்டவையாக இருக்கலாம். தூய்மை விதிகள்தான் லேவியர் நூலின் இதயமாகச் செயல்படுகின்றது எனக்கூறலாம். இந்த நூலை தொகுத்தவர்கள அல்லது இந்த நூலுக்கு இறுதி வடிவம் கொடுத்தவர்கள் யார் என்பது தெளிவாகத் தெரியவில்லை. ஆனால் இவை குருக்கள் மரபிலிருந்து வருகின்றன என்பதில் சந்தேகமில்லை. லேவியர் நூல் ஐந்நூல்களில் உள்ள ஏனைய நூல்களைப் போல இஸ்ரயேல் மக்கள் அனைவருக்காகவும் எழுதப்பட்டது. இதில் பாபிலோனியாவிற்கு நாடுகடத்தப்பட்ட பின் திரும்பி வந்தவர்கள், யூதேயாவில் தொடர்ந்து வாழ்ந்தவர்கள் இன்னும் பல நாடுகளில் சிதறி வாழ்ந்த மக்கள் அனைவரும் அடங்குவர். இந்நூலின் நோக்கம் இஸ்ரயேல் ஒரு இனமாக மீண்டும் கட்டியெழுப்பப்படவேண்டும் என்பதுதான்.

மேலோட்டமாகப் பார்க்கையில் லேவியர் நூல் வெறுமனே சட்டங்களையும் விதிமுறைகளையும் மட்டுமே உள்ளடக்கமாகக் கொண்ட ஒரு நூலாகத் தெரியலாம்; ஆனால் அவற்றிற்கு அடித்தளமாககடவுள் தூயவர் என்ற நம்பிக்கையும், சடங்குமுறைகள் மற்றும் பலிகள் வழியாகக் கடவுளை அடையலாம் என்ற சிந்தனைகளும்; உள்ளன. கடவுள் எல்லா படைப்புகளுக்கும் ஆண்டவர் எனவே நமது ஆராதனையும், நன்றியும், புகழ்ச்சியும் அவருக்கு உரியது. நமது தேவைகளுக்காக வேண்டுதல் செய்தும் பாவங்களுக்காக வருந்தியும் அவரிடம் நாம் வரலாம். லேவியர் நூலில் குறிப்பிடப்பட்டுள்ள சடங்குகள் மற்றும் வழிபாடுகள் அனைத்தும் ஆண்டவர் தூயவர் என்பதை அறிக்கையிடவும், நமது வாழ்விற்கு கடவுள் தேவை என்பதை அறியவும் அவசியமானவை. சடங்குத் தூய்மை மற்றும் தூய்மை விதிகள் கடவுளின் தூய்மையை நினைவுபடுத்துகின்றன. நாமும் தூய்மையுள்ளவர்களாக கடவுளை அணுகி வர வேண்டும். ஏனெனில் கடவுள் அனைத்திலும் தூய்மையுடையவராக இருக்கிறார். வெளிப்புறச் சடங்குகளில் மட்டுமல்ல உள்மனச் சிந்தனைகளிலும்; தூய்மை இருக்கவேண்டும்; அதாவது நாம் தூய்மையான உள்ளத்தோராக இருக்கவேண்டும். மேலும் இஸ்ரயேல் மக்கள் தங்கள் அன்றாட வாழ்க்கையில் எப்படிப்பட்டவர்களாக இருக்கவேண்டும் என்பதையும் லேவியர் நூல் கற்பிக்கிறது. உதாரணமாக, குடும்ப உறவுகள், நோயாளிகள் மற்றும் முதியோருடன் கொண்டிருக்கவேண்டிய உறவு, மற்றும் புலம் பெயர்ந்து வாழ்பவர்கள், அகதிகள் ஆகியோரை எப்படி நடத்தவேண்டும் என்பதற்கான வழிமுறைகள் ஆகியவற்றையும் இந்நூல் கற்பிக்கிறது.

கடவுளின் மக்கள் என அழைக்கப்படும் இஸ்ரயேல் மக்கள் தூயோராக வாழவேண்டுமென்பது கடவுளின் விருப்பம். தூயோராய் இருங்கள். ஏனெனில் உங்கள் கடவுளும் ஆண்டவருமாகிய நான் தூயவர்! (லேவி 19:2) என்ற சொற்றொடர் இந்த விருப்பத்தை உள்ளடக்கியுள்ளது. தூய்மை என்ற சொல்லின் வேர்ச்சொல், தனிமைப்படுத்துதல் என்ற பொருளைக் கொண்டது. அதாவது தீட்டானவைகளிலிருந்து தனிமைப்படுத்தி கடவுள் விரும்புவதை மட்டும் செய்பவர்தான் தூயோராக வாழ்கிறார் எனக்கூறலாம். தன்னைப்போல தனது மக்களும் தூயோராக வாழவேண்டும் என்பதற்கு அடிப்படைக் காரணம் கடவுள் தன் மக்கள் நடுவில் வாழவேண்டும் என்று விரும்புவதுதான். கடவுள் தூயவர், நிறைவுள்ளவர். தூயவரான கடவுள், நிறைவுள்ளவரான கடவுள் எவ்வாறு பாவிகளான மக்கள் நடுவில் வாழமுடியும்? என்ற கேள்வி எழலாம். கடவுள் இந்த உலகையும், உலகில் உள்ள அனைத்தையும் படைத்தபோது அனைத்தும் நல்லவை, தூய்மையானவை என்று கண்டார் (தொநூ 1) எனத் தொடக்கநூல் கூறுகிறது. மேலும் மனிதரைப் படைத்தபோது அவர்களைத் தனது சாயலிலும் உருபிலும் படைத்தார் எனவும் வாசிக்கிறோம். மனிதர்கள் பாவிகளாக இருந்தாலும் கடவுளின் தன்மையைக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நாம் மறத்தலாகாது. மனிதர்களில் இருக்கிற இந்தக் கடவுள் தன்மை அவர்கள் கடவுளைப் போல வாழமுடியும் என்பதைக் கூறுவதாக உள்ளது. மனிதர்கள் கடவுளைப் போல தூயோராய் வாழும்போது கடவுள் அவர்கள் நடுவில் வாழ்கிறார்; மனிதர்களும் கடவுளைப் பிரதிபலிக்கிறார்கள்.

பயணம் தொடரும்...

அருட்பணி. ஆ. அலெக்ஸ் CMF

# ஞாயிறு மறையுரை



மறையுரை வழங்குபவர்

அருட்பணி. **ஸ்டீபன் கஸ்பார்**

பங்குத்தந்தை

**திருமுழுக்கு அருளப்பர் ஆலயம்**

காமலாபுரம், திண்டுக்கல் மறைமாவட்டம்

## பொதுக்காலம் 6–ஆம் ஞாயிறு

12–02–2023

| | |
|---|---|
| முதல் வாசகம் | **சீரா. 15:–20** |
| இரண்டாம் வாசகம் | **1 கொரிந்தியர் 2:6–10** |
| நற்செய்தி வாசகம் | **மத்தேயு 8:17–37** |

இறை இயேசுவிலே எனக்கு மிகவும் பிரியமான இறைச் சமூகமே, கடந்த வாரம் ஆண்டின் பொதுக்காலம் 5ம் ஞாயிறன்று மத்தேயு 5/13-16ல் ஒவ்வொரு கிறிஸ்தவனின் வாழ்வும் இந்த உலகிற்கு உப்பாக, ஒளியாக இருக்க வேண்டும். உப்பு தூய்மையானது, வெண்மையானது, சேரும் பொருளை பாதுகாக்கிறது. சுவையூட்டி தன்னை இழக்கிறது. அதுபோலவே ஒளியும் தன்னை இழந்து இருட்டைக் களைகிறது. ஒளியுள்ள இடத்தில் அச்சமில்லை, பயமில்லை. நம் ஆண்டவர் இயேசுவும், நானே உலகின் ஒளி, என்னைப் பின்செல்பவன் இருளில் நடக்க மாட்டான். எனவே ஒவ்வொரு கிறிஸ்தவனும் உலகிற்கு ஒளியாக, உப்பாகத் திகழ்ந்தால் இவ்வுலகின் பாவ இருள் அகற்றப்படும். பாவத்திலிருந்து மீட்க தன்னைக் கல்வாரியில் பலியாக்கிய இயேசுவாய் நாம் மாற வேண்டுமென்ற நற்சிந்தனையை அள்ளித்தந்த அருள்வாக்கை உள்வாங்கி தியானித்தோம்.

இந்த வாரத்திலே அதன் தொடர்ச்சியான மத்தேயு 5/17-37ஐக் கேட்டோம். இன்றைய நற்செய்தியிலே நாம் விரும்பித் தேடக்கூடாத 7 செயல்கள் கொடுக்கப்பட்டுள்ளன. அவை...

1.கொலை செய்யாதே, 2. சினம் கொள்ளாதே, 3.மனத்தாங்கள் கொள்ளாதே, 4.விபச்சாரம் செய்யாதே, 5. பெண்ணை இச்சையோடு நோக்காதே, 6. மணமுறவு நாடாதே, 7. பொய்யாணை இடாதே என்பனவாகும். இவை ஏழுமே கடவுளின் அன்பிற்கும் மானுடத்திற்கும் எதிரான செயல்களாகும். இவை ஏழுமே ஒன்றோடு ஒன்று தொடர்புடையவை.

சிந்தித்துப் பார்ப்போம். நம்மிடம் ஏன் சினம் வருகிறது. எதனால் வருகிறது. அதாவது நாம் விரும்பும் செயல் நடக்கவில்லையென்றால் சினம் கொள்கிறோம். அதனால் உறவுச் சிக்கல் உண்டாகிறது. கடும் சினம் கொலையில் ஒருவனை நிறுத்திவிடுகிறது. தொடக்க நூலில் காயின் ஆபேல் நிகழ்வில் காயின் தன் சகோதரன் ஆபேல் மேல் பொறாமைப்பட்டான், அவனது பொறாமை சினமாய் சீற்றமெடுத்தது. சகோதரனை தோட்டத்திற்கு அழைத்துச் சென்றி கொன்றதை நாம் வாசிக்கின்றோம். சினம் தனி மனிதனை மட்டுமின்றி குடும்பத்தை, சமூகத்தை அழிக்கிறது. மற்றவரின் நற்பெயரை, நற்குணங்களை சிதைக்கிறது.

ஒவ்வொரு நாளும் நாளிதழிலும், ஊடகங்களிலும் பார்ப்பது முறையற்ற உறவு, ஒழுக்கமற்ற வாழ்வு, கூடா நட்பு நாகரீகமென்ற பெயரில் ஆடைகுறைப்பு, உடலைப் பொருளாகப் பார்க்கும் நிலையைக் காணமுடிகிறது. குறிப்பாக

பெண்களைத் தாயாக, தங்கையாகப் பார்ப்பது தவறி போதைப் பொருளாய், போகப் பொருளாய் தீய பார்வை மிகுந்து அவளையடைய அதிய ஆர்வம் காட்டுவது தெரிகிறது. பெண்களும் எளிதில் வயப்பட்டு வீழ்ந்துவிட வாய்ப்பு உள்ளது. ஊடகம், அலைபேசி போன்ற சாதனங்களை விடாமல் பார்த்து அதை நடைமுறைப்படுத்த விரும்பும் 15 வயது வரை வளர்த்த அன்பு காட்டிய, அரவணைத்த பெற்றோரை உதறித்தள்ளி 10 மாதம் பழகிய காதலனைக் கரம்பற்றி வீணாய்ப்போகும் பெண்களின் வாழ்க்கைகளை அறியவருகிறோம். இச்சையோடு ஒரு மனிதனை நோக்கினாலும் ஒரு மனுசியை நோக்கினாலும் அவள் அவன் விபச்சாரம் செய்கிறான், விபச்சாரி ஆகிறாள். சமுதாயத்தில் பிற்காலத்தில் தலைநிமிர முடிவதில்லை. படிக்கிற பருவத்தில் சேட்டை செய்ய ஆசைவரும். அதுவே வாழ்க்கையல்ல. உன் எண்ணத்தை மடைமாற்றம் செய்தால் நன்கு வாழலாம்.

காம உணர்வுகளைக் கட்டுப்படுத்த வில்லயெனில், அது குடும்ப உறவைக் களைந்துவிடும். மேலும் மணமுறிவு அல்லது மணவிலக்கு குடும்ப உறவைப் பாதிக்கிறது என இயேசு சொல்லுகிறார்.

தொடர்ந்து அவர் பொய்யாணை யிடாதே. பொய்சாட்சி சொல்லாதே என்கிறார். இயேசுவின் காலத்தில் ஆணையிடுதல் சாதாரண நிகழ்வாகக் கருதப்பட்டது. ஆணையிடுதலும் இதைப்போன்றே கையாளப்பட்டது. ஒருவர் தான் சொல்வது உண்மை என்று உறுதிசெய்ய, அறிக்கையிட கடவுளையோ, பிறரையோ துணைக்கு அழைப்பதாகும். சிலநேரம் ஆணையை நிறைவேற்றாமல் கடவுளையோ, மற்றவரையோ பொய்யராக்குகிறோம். இதற்கு மாறாகவே இயேசு ஆணையிடுதலை தவிர்க்க அழைப்பு தருகிறார். ஒருவரின் தனிநபர் நாணயத் தன்மையே மிக முக்கியமென்கிறார் இயேசு.

இன்றைய முதல் வாசகத்தின்படி நாம் எதனைத் தேர்வு செய்யவுள்ளோம். நீரைத் தேர்வு செய்வது வாழ்வின் வழி. நெருப்பைத் தேர்வு செய்வது அழிவின் வழி. நாம் வாழ்வுதரும் தண்ணீராக மாறவேண்டும். காட்டையே அழிக்கும் தீயாகிடக்கூடாது. தீபோல கடினமாக அழிக்கும் பணிகளைத் தவிர்த்து ஆக்கப்பூர்வக் காரியத்தில் இறங்க எசாயா அழைக்கிறார். இயேசு மத்தேயு7/14ல் வாழ்வுக்குச் செல்லும் வாயில் குறுகிறது அதையே நாம் நாடவேண்டும் என்கிறார்.

இதுபற்றியே பவுல் இன்றைய 2ம் வாசகத்தில் நாம் வாழ்வு பெற மேன்மைபெற இறைவன் தந்துள்ள கொடையே ஞானம். இந்த ஞானம் போன்ற கொடைகள் ஏழையும் தருபவர் தூய ஆவியாரே. தூய ஆவியார் வழியாய் மன்றாடி ஞானத்தைக் கேட்டுப் பெறுவோம். ஞானத்தைப் பெறுகிற மனிதன் வாழ்வின் வழியில் நடக்கிறான். நானே வாழ்வும் வழியும் என்று சொல்லும் நம் இயேசுவைப் போல், ஏழைகட்கு இறங்கி நன்மை செய்கிற இயேசுவின் பிள்ளையான் மாறுவோம்.இதனை நாம் கண்டடைய நம்மில் தரப்பட்ட தூய ஆவியார் வழியாய் இப்பலியில் இணைந்து இறைஞ்சுவோம். ஆமென்.

**Keep your face to the sunshine and you cannot see a shadow.**

**- Helen Keller -**

# பொதுக்காலத்தின் 6-ஆம் ஞாயிறு

சீரா. 15:15-20, 1 கொரி. 2:6-10, மத். 8:17-37



பா. சேவியர்
திண்டுக்கல்



**12-02-2023**

## திருப்பலி முன்னுரை

சகோதர அன்பு, பிறன் மனை நோக்காமை, உண்மை உரைத்தல் போன்ற உயர்ந்த படிப்பினைகளை உயர்த்திப் பிடிக்கும் பொதுக்காலத்தின் ஆறாம் ஞாயிறு திருப்பலிக் கொண்டாட்டத்தில் பங்கேற்க வந்துள்ள இறைமக்களே! உங்களை இத்திருவழிபாட்டிற்கு அன்புடன் வரவேற்கிறேன்.

யாவே, மோசேக்குத் தந்த பத்துக் கட்டளைகளுக்குப் புதிய அணுகுமுறையைத் தந்து திருச்சட்டத்திற்கு எதிரான கொலை, விபச்சாரம், பொய்யாணை போன்ற தீமைகளில் இருந்து விலகி, மனத் தூய்மையோடு வாழ நம்மை அழைக்கிறது இன்றைய வார்த்தை வழிபாடு.

இறை ஞானத்தைப் பெற அதன் வழியாக இறைவனை மேலும் மேலும் அன்பு செய்ய நாம் ஆர்வம் காட்டுகிறோமா? காலத்தின் அறிகுறிகளை அறியவும் அதற்கேற்ப செயல் புரியவும் இறை ஞானம் நம்மைத் தூண்டுகிறதா? என்ற கேள்விகளை முன்னெழுப்பி நம்மை சிந்திக்க அழைக்கிறது இன்றைய திருப்பலி.

நம்முடைய வாழ்க்கை நம் கையில், நம்முடைய வாழ்வும் தாழ்வும் நம்மைப் பொறுத்தே இருக்கின்றன. தீதும் நன்றும் பிறர் தர வாரா, எனவே சாவுக்கான நெறிகளை விலக்கி விட்டு, வாழ்வுக்கான வழியில் தொடர்ந்து பயணிக்க, கோபம், பகை, வெறுப்பு இவைகளை அடியோடு ஒழித்து மற்றவர்களைப் பற்றிய இனிமையான நினைவுகளை மட்டுமே மனதில் கொண்டு வாழ இத்திருப்பலி வழியாக இறையருளை வேண்டுவோம்.

## முதல் வாசக முன்னுரை

ஞானத்தின் பெட்டகமாக விளங்குகின்ற சீராக் நூலில் இருந்து எடுக்கப்பட்ட இன்றைய முதல் வாசகம், வாழ்க்கை நெறிமுறைகளைத் தாங்கி வருகிறது. நாம் நமது விருப்பம்போல் எதையும் செய்யலாம். மனம் போன போக்கில் வாழலாம். ஆனால் ஒவ்வொரு வினைக்கும் எதிர்வினை உண்டு. நாம் நமது ஒவ்வொரு செயலுக்கும் தக்க வெகுமதி பெறுவோம் என்பதை எடுத்துரைத்து எச்சரிக்கும் இவ்வாசகத்தை கவனமுடன் கேட்டு கருத்தில் கொண்டு அதன்படி வாழ்வோம்.

## இரண்டாம் வாசக முன்னுரை

மறை உண்மைகளை அறிந்கொள்ள, அதனை வாழ்வாக்கி வாழ இறை ஞானம் வேண்டும் என்பதை நாம் கேட்கவிருக்கும் இன்றைய இரண்டாம் வாசகம் மூலம் எடுத்துரைக்கிறார் திருத்தூதர் பவுலடியார் நாம் நல்வழியில் வாழ்ந்து மேன்மை பெற, இறைவனை அன்பு செய்ய தூய ஆவியார் வழியாக வெளிப்படுத்தப்படும் இறை ஞானம் குறித்து விளக்கும் இவ்வாசகத்திற்கு கவனமுடன் செவி மடுப்போம்.

## மன்றாட்டுகள்

1) தந்தையே விண்ணுக்கும் மண்ணுக்கும் ஆண்டவரே, தூய ஆவியார் வழியாக நீர் தந்த இறை ஞானத்தைக் கொண்டு மறை உண்மைகளை மக்களுக்கு அறிவித்து, தீய நெறிகளில் இருந்து அவர்களை விடுவித்து, மனத் தூய்மையோடு வாழ அவர்களை நெறிப்படுத்தி வழி நடத்தி வரும் உம் திரு அவையின் தலைவர்களுக்கு சிறந்த இறை ஞானத்தையும், ஆற்றலையும், நல்ல உடல் நலத்தையும் தந்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

2) ஞானத்தின் ஊற்றே இறைவா, திருமுழுக்கின் வழியாக உம்மால் தேர்ந்து கொள்ளப்பட்ட கிறிஸ்துவர்களாகிய நாங்கள், மற்ற மக்களைவிட மேலான வாழ்வு வாழ அழைக்கப்பட்டிருக்கிறோம் என்பதை உணர்ந்து, சாவின் நெறிகளை எம் வாழ்விலிருந்து முற்றாக அகற்றி, வாழ்விற்கான வழிகளை அறிந்து தெரிந்து அதன்படி வாழ அருள் தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

3) வாழ்வின் வழியே இறைவா, நன்மை தீமைகளை பகுத்தறியும் ஞானத்தையும் நன்மையின் வழியில் சமரசமின்றி பயணிக்கும் மன உறுதியையும் எங்களுக்கு தந்தருளும். உமது அருளின் துணையோடு சரியானவற்றை கண்டுணர்ந்து, உமது கட்டளைகளைக் கடைப்பிடித்து, உமது பாதுகாப்பிற்கு உரியவர்களாக வாழ அருள்தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

4) அன்பும் இரக்கமும் நிறைந்த இறைவா, எமது பங்கில் இயங்கி வரும் அன்பியங்களை நிறைவாக ஆசீர்வதியும். ஆலயப் பணிகளிலும் ஆன்மீகப் பணிகளிலும் ஆர்வமுடன் பணியாற்றவும், அனைத்துக் காரியங்களிலும் எம் பங்குத் தந்தைக்கு உறுதுணையாக இருக்கவும். இருப்பதை இல்லாதவர்களுடன் பகிர்ந்து சாட்சிய வாழ்வு வாழவும் தேவையான அருளையும் ஆசியையும் ஞானத்தையும் தந்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.



# திருக்குறள் வழங்கும்
# சமூக நெறிச் சிந்தனைகள்



சிந்தனையாளர்
அருட்சகோதரி. **ஜெஸிந்தா ஜான்சன்** FSPM

## குறள் – 32

அறத்தினூஉங் காக்கமும் இல்லை அதனை
மறத்தலின் ஊங்கில்லை கேடு

### குறள் விளக்கம்

ஒருவருடைய வாழ்க்கைக்கு அறத்தைவிட நன்மையானதும் இல்லை: அறத்தை போற்றாமல் மறப்பதை விடக் கொடியதும் இல்லை.

### சிந்தனை

அந்த ஞானி, தன் சீடர்களிடம் அலுத்துக் கொண்டார். இந்த மனிதர்கள் எப்போதுதான் மனிதர்களாக நடந்து கொள்வார்களோ தெரியவில்லை என்று. சீடர்கள் கேட்டார்கள், ஒருவர் மனிதர் என்பதற்கு என்ன அடையாளம், என்று அதற்கு ஞானி சொன்னார், எந்த ஒரு நாளிலாவது மனிதன் பொய் சொல்ல வேண்டிய தேவையில்லாமல் வாழ்வான் என்றால் அந்த நாள் தான் அவன் மனிதனான நாள் என்று.

கடவுள் ஆபிரகாமிடம், நான் உன்மீது உண்மையாகவே ஆசிபொழிந்து விண்மீன்களைப் போலவும் கடற்கரை மணலைப் போலவும் உன் வழிமரபைப் பலுகிப் பெருகச் செய்வேன் என்றார் தொநூ 22:17. கடல் மணலை எண்ணிவிட முடியுமா? கடல் மணலைப் போல் உன் சந்ததியை பெருகப் பண்ணுவேன். உன் சந்ததியை ஆசீர்வதிப்பேன்;. என்னுடைய ஆசீர் எண்ணில் அடங்காது என்று சொல்வது போல, அறவோர் பெருமையை கூறுவது அவ்வளவு கடினமானது. இறைவனின் ஆசீரை எண்ணிப் பார்ப்பது எவ்வளவு கடினமானதோ கடல்கரை மணலை எண்ணுவது எவ்வளவு கடினமோ, வானத்திலுள்ள நட்சத்திரங்களை எண்ணுவது எவ்வளவு கடினமோ அது போன்று அறவோரின் பெருமையை பறைசாற்றுவது மிக மிக கடினமான காரியமாகும். அது எவ்வளவு கடினம் என்றால், இந்த உலகம் தோன்றியது முதல் இந்நாள் வரை இறந்தவர்களை எண்ணிவிட முடியுமா? அது எவ்வளவு கடினமோ அதுபோன்று அறவோர் பெருமையை முற்றிலும் எடுத்துரைப்பது கடினமான காரியம்.

இறைவனை ஒருவன் அனுபவித்துவிட்டால் அந்த இறைஅனுபவத்தை அவன் மற்றவரிடம் எப்படி சொல்லுவது. அதனை கையில்லா ஊமையன் வெல்லம் சாப்பிட்டதற்கு ஒப்பிடலாம். அவன் வெல்லம் சாப்பிட்டுவிட்டான். அவனுக்கு கையில்லை எனவே அச்சுவையை எழுதியும் காட்ட முடியாது. அவன் ஊமையாயிருப்பதால் வாய்ச் சொல்லினாலும் கூறிவிட முடியாது. அதை அனுபவித்தால் தான் உணர முடியும். அதே போன்று தான் அறவோர் பெருமை மிகப் பெரியது அதனை வார்த்தைகளால் சொல்ல முடியாது. அதை அனுபவித்து தான் உணர முடியும். துறந்தார் பாதத்தில் அமர்ந்து அவர்களை புரிந்து கொண்டால் தான் அவர் பெருமையை உணர முடியும். அதனை எண்ணி எடுத்துரைப்பது இயலாதது என்று வள்ளுவர் கூறுகின்றார்.

அறவோர் பெருமையை எடுத்துரைப்பது எவ்வளவு கடினம் என்று இக்குறள் மிகத் தெளிவாக நமக்கு விளக்கியது. அறவோர் பெருமையை எடுத்துரைப்பதே கடினம் எனில், அறவோராக வாழ்வது எத்துனை கடினமாகும். ஞானி கூறுவதை போன்று மனிதனாக வாழ முற்படுவோம். மனிதன் ஒரு நாள் புனிதனாவான் என்ற உறுதியோடு.




சகோதரி. ரோசி. காங்கேயம்
புனித காணிக்கை அன்னை சபை

# சமூகமும் சட்டமும்

பணியிடத்தில் பாலியல் வன்முறை (தடுப்புஇபாதுகாப்பு குறைதீர்ப்பு) சட்டம் 2013 இந்தியாவில் பணியிடத்தில் பாலியல் வன்முறையிலிருந்து பெண்களுக்கு பாதுகாப்பு அளிப்பதற்காக பணியிடத்தில் பாலியல் வன்முறை (தடுப்பு, பாதுகாப்பு குறைதீர்ப்பு) சட்டம் 2013 நிறைவேற்றப்பட்டது.

இது விசாகா வழக்கில் நீதிமன்றம் அளித்த வழிகாட்டுதலானது நிறுவனம் மற்றும் அதில் பணியாற்றும் ஊழியர்களை மட்டுமே கட்டுப்படுத்துவதாக இருந்தது. ஆனால் பணியிடத்தில் பாலியல் வன்முறை (தடுப்பு, பாதுகாப்பு, குறைதீர்ப்பு) சட்டமானது அலுவலகங்களில் பணிபுரியும் நிரந்தரத் தொழிலாளர்களுக்கு மட்டுமின்றி கட்டிடத் தொழிலாளர்கள் வீட்டு வேலை செய்யும் பெண்கள் உள்ளிட்ட முறைசாராத் தொழிலாளர்கள் தற்காலிக அல்லது ஒப்பந்தத் தொழிலாளர்கள் தினக்கூலி அல்லது பயிற்சி அல்லது அப்ரெண்டிஸ் அடிப்படையில் வேலை செய்பவர்கள் ஊதியம் பெற்றோ அல்லது பெறாமலோ பணிபுரிபவர் தன்னார்வ அடிப்படையில் பணிபுரிபவர் என அனைத்து பெண் தொழிலாளர்களுக்கும் பணியிடத்தில் பாதுகாப்பு அளிப்பதாக உள்ளது. இச்சட்டத்தின்படி 10 பேருக்கு மேல் பெண்களை பணியிலமர்த்தி உள்ள எந்தவொரு நிறுவனமும் அலுவலக அளவிலான புகார் குழு ஒன்றை அமைத்திட வேண்டும். இக்குழுவின் தலைவராக அந்நிறுவனத்தில் உயர்நிலை பொறுப்பில் பணிபுரியும் பெண் ஒருவர் இருக்க வேண்டும். பெண்களின் நலனில் அக்கறையோடு அல்லது சமூக செயல்பாட்டில் அக்கறையோடு அல்லது சட்ட அறிவு கொண்ட சக பெண் ஊழியர் இருவர் உறுப்பினராக இருப்பதுடன் பெண்களின் மேம்பாட்டில் ஈடுபடும் அல்லது பாலியல் துன்புறுத்தல் குறித்த வழக்குகளில் தலையீடு செய்யும் அனுபவம் கொண்ட தன்னார்வத் தொண்டு நிறுவனத்தை சேர்ந்த ஒருவரும் இக் குழுவில் உறுப்பினராக இருக்க வேண்டும். பணியிடத்தில் பெண்கள் தங்களுக்கு இழைக்கப்படும் பாலியல் வன்கொடுமைகள் குறித்த புகாரினை நிறுவன அளவிலான அல்லது இட அளவிலான புகார் குழுவிடம் அளித்திடலாம். பாலியல் துன்புறுத்தல் சம்பவம் நடந்து 3 மாதங்களில் எழுத்துப்பூர்வமான புகாரினை அளித்திட வேண்டும். உடல் அல்லது உளரீதியான பாதிப்பின் காரணமாக இறப்பு அல்லது வேறு ஏதேனும் காரணத்தினால் பாதிக்கப்பட்ட பெண்ணால் எழுத்துப்பூர்வமாக புகார் அளிக்க இயலவில்லை எனில் அவளது சட்டப்பூர்வமான வாக்குச்சூதாரரோ அல்லது வேறு எவரேனுமோ புகாரினை பதிவு செய்திடலாம். பாதிப்பிற்காளான பெண் விரும்பினால் புகார் குழுவானது விசாரணை மேற்கொள்வதற்கு முன்னதாக பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண முயற்சியினை மேற்கொள்ளலாம். பேச்சுவார்த்தையில் எட்டப்பட்ட தீர்வு அமலாகாதபோது புகார் குழு தனது விசாரணையைத் துவக்கிடலாம். புகாரினை விசாரித்திடும் இக்குழுவானது குற்றம் உண்மையெனில் ஊழியரின் தவறுக்கேற்ப எச்சரிப்பது அல்லது அலுவலகம் சார்ந்த நடவடிக்கை மேற்கொள்வது அல்லது காவல்துறையிடம் வழக்கை ஒப்படைப்பது என்ற நடவடிக்கையை மேற்கொள்ள முடியும். விசாரணை நடைபெறும் காலத்தில் பாதிக்கப்பட்ட பெண் எழுத்துமூலம் கோரினால் அப்பெண்ணையோ அல்லது குற்றம்சாட்டப்பட்டவரையோ இடமாற்றம் செய்திடலாம். ஏற்கனவே உள்ள விடுப்புடன் 3 மாத காலம் வரையிலான சிறப்பு விடுப்பு பாதிக்கப்பட்ட பெண்ணிற்கு அளித்திடலாம். பொதுவாக விசாரணை என்பது 90 நாட்களுக்குள் முடிக்கப்பட வேண்டும். விசாரணை நடத்தப்பட்டு முடிந்தவுடன் 10 நாட்களுக்குள் புகார் குழுவானது தனது அறிக்கையை அளித்திட வேண்டும். இந்த அறிக்கையின் அடிப்படையில் 60 நாட்களுக்குள் முதலாளி அல்லது நிறுவனர் அல்லது மாவட்ட அதிகாரி நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். மேலும் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை குறித்து புகார் குழுவிற்கும் தெரிவிக்க வேண்டும்.

தடுப்பதற்கான வழிமுறைகள் பொதுத்துறை அல்லது தனியார் துறை நிறுவனங்கள் அல்லது பணியிடத்திற்கு பொறுப்பாக உள்ளவர்கள் பாலியல் வன்முறையை தடுப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் பொதுவாக இக்கடமைக்கு எந்த பாதகமும் இன்றி நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும்.



திருப்பலி வாசகங்கள்

# பொதுக்காலம் 6–ஆம் வாரம்

**12.02.2023**
**முதல்**
**18.02.2023**

### 12.02.2023 – பொதுக்காலம் 6–ஆம் வாரம் ஞாயிறு

முதல் வாசகம் : சீராக் 15:15–20
இரண்டாம் வாசகம் : 1 கொரிந்தியர் 2:6–10
நற்செய்தி : மத்தேயு 5:17–37

### 13.02.2023 – திங்கள் கிழமை

முதல் வாசகம் : தொடக்கநூல். 4:1–15, 25
நற்செய்தி : மாற்கு 8:11–13

### 14.02.2023 – செவ்வாய் கிழமை

முதல் வாசகம் : தொடக்கநூல் 6:5–8, 7/1–5, 10
நற்செய்தி : மாற்கு 8:14–21

### 15.02.2023 – புதன் கிழமை

முதல் வாசகம் : தொடக்கநூல் 8:6–13, 20–22
நற்செய்தி : மாற்கு 8:22–26

### 16.02.2023 – வியாழக்கிழமை

முதல் வாசகம் : தொடக்கநூல் 9:1–13
இரண்டாம் வாசகம் : மாற்கு 8:27–33

### 17.02.2023 – வெள்ளிக்கிழமை

முதல் வாசகம் : தொடக்க நூல் 11:1–9
நற்செய்தி : மாற்கு 8:34–9:1

### 18.02.2023 – சனிக்கிழமை

முதல் வாசகம் : எபிரேயர் 11:1–7
நற்செய்தி : மாற்கு 9:2–13

### 12.02.2023 – ஞாயிறு

***பொதுக்காலம் 6ஆம் வாரம்***

முதல் வாசகம் : சீராக்கின் ஞானம் 15:15–20
இரண்டாம் வாசகம் : 1 கொரிந்தியர் 2:6–10
நற்செய்தி : மத்தேயு 5:17–37



Pray as though everything depended on God. ...

- St. Augustine

## நலம் தரும்

# இயற்கை வளம்



ஜே. அன்புரோஸ்
கோபிச்செட்டிபாளையம்.

உறவுகளே இனிய வணக்கம். இன்றைய நலக்கல்வி..!

## குடல்புண் ஆற்றும், மலச்சிக்கல் போக்கும், ஆண்மை பெருக்கும் துத்தி!

துத்திப் பூவால் ரத்த வாந்தி நிற்கும்.
காச ரோகம் நீங்கும்.
சுக்கில (விந்து) விருத்தி உண்டாகும்
தேகம் குளிர்ச்சி அடையும்
என்று அகத்தியர் குணபாடம்' துத்தியின் மேன்மையைப் பறைசாற்றுகிறது.
நம்முடைய முன்னோர்கள் மருத்துவ குணங்கள் நிறைந்த
பல்வேறு கீரைகளை உணவுப் பொருளாக பயன்படுத்தி வந்தனர்.
அதைப் போன்ற சிறப்புவாய்ந்த கீரை வகைகளை
நாம் அதிகம் கண்டுகொள்வதே இல்லை.
எந்தப் பராமரிப்பும் இல்லாமல் வளர்ந்து எண்ணற்ற நோய்களைப் போக்கும்
கீரை வகைகள் பல உள்ளன.
அவற்றுள் முக்கியமான ஒரு கீரை வகை ஹதுத்தி.'

துத்திக் கீரை பருத்தி இனத்தைச் சார்ந்த ஒரு குறுஞ்செடி.
இதற்கு அதிபலா என்ற மற்றொரு பெயரும் உண்டு.
இதை ஆங்கிலத்தில் 'ஞுஜ ஷ்ழிஜ துழியியிலிழ' என்று அழைப்பர்.
இதன் இலைகள் மிகவும் பசுமையாக இதய வடிவில் இருக்கும்.
இதில் மஞ்சள் நிறத்தில் அழகான பூக்கள் பூக்கும்.
இதனுடைய விதை, வேர், இலை, பூ, காய் என அனைத்தும் மருத்துவத் தன்மைகொண்டது.
இதன் காய்கள் தோடு போன்று காணப்படும்.
இது இனிப்புச் சுவை உடையது. உடலுக்கு நல்ல குளிர்ச்சியைத் தரக்கூடியது.
இது கடற்கரை ஓரங்கள் மற்றும் சாலை ஓரங்களில் வளரக்கூடியது.
இது இரண்டு முதல் மூன்று அடி உயரம் வளரக்கூடியது.
29 வகையான துத்திகள் உள்ளன.
ஆனால் அதிகமாகப் பயன்படுத்தப்படுவது ஹபணியாரத் துத்தி.'
துத்திக்கீரை கூட்டு
துத்திக்கீரை – 200 கி
சின்ன வெங்காயம் – 100 கி
வேகவைத்த துவரம் பருப்பு – 3 டீஸ்பூன்
மிளகுத் தூள் – 1/2 டீஸ்பூன்
சீரகம் – 1 டீஸ்பூன்
நல்லெண்ணெய் – 3 டீஸ்பூன்
துத்திக்கீரை மற்றும் சிறிய வெங்காயத்தைப் பொடியாக நறுக்கிக்கொள்ளவும்.

பின்னர் வாணலியில் நல்லெண்ணெய் ஊற்றி
அதில் சீரகத்தைப் போடவும்.
நறுக்கி வைத்திருக்கும் கீரை மற்றும் வெங்காயத்தை வாணலியில் போட்டு வதக்கவும்.
பிறகு தேவையான அளவு நீர் ஊற்றி வேகவைக்கவும்.
நன்றாக வெந்த பின்னர் துவரை மிளகுத்தூள் போடவும். தேவையான அளவு உப்பு சேர்த்து இறக்கினால்
ஆரோக்கியமான கூட்டு தயார்.
இதனைச் சாதத்துடன் நெய் கலந்து சாப்பிட்டுவர
மூலம் தொடர்பான அனைத்துப் பிரச்னைகளும்
பெண்களுக்கு உண்டாகும் வெள்ளைப்படுதலும் நீங்கும்.
துத்தியால் கிடைக்கும் மருத்துவப் பயன்கள்:
மூலநோய்க்கு ஆகச்சிறந்த நிவாரணியாக துத்தி இருக்கிறது.
துத்தி இலையை ஆமணக்கு எண்ணெயில் நன்றாக வதக்கி மூலத்தில் கட்டினால் வீக்கம் குறையும்.
கையளவு துத்திக் கீரையை எடுத்து நீரில் கொதிக்கவைத்து
பனங்கற்கண்டு பாலில் கலந்து குடித்தால்
மலக்கட்டு ஆசனவாய் எரிச்சல் ஆகியவை நீங்கும்.
துத்தி இலைகளை நெய்யில் வதக்கி சாதத்துடன் கலந்து 40 முதல் 120 நாள்கள் சாப்பிட்டுவர
பெண்களுக்கு ஏற்படும் வெள்ளைப்படுதல் நிற்கும்.
துத்தி இலையை நீரில் நன்றாகக் கொதிக்கவைத்து
தினமும் வாய் கொப்பளித்து வந்தால் பற்களின் ஈறுகளில் கசியும் ரத்தம் நிற்கும்.
இந்தக் கீரையை உணவுடன் சேர்த்து சாப்பிட்டுவர
தசைகளுக்கு நல்ல வலுவைக் கொடுக்கும்.
இதனால்தான் இது அதிபலா என்று அழைக்கப்படுகிறது.
உடலில் ஏதேனும் புண்கள் ஆறாமல் இருந்தால்
இதன் இலையைப் பிழிந்து சாறு எடுத்து
மஞ்சளுடன் கலந்து பூசிவர புண்கள் விரைவில் குணமாகும்.
இதன் சாற்றைப் பச்சரிசி மாவுடன் கலந்து
கட்டிகள் உள்ள இடத்தில்வைத்துக் கட்டினால் கட்டிகள் உடையும்.
துத்திப்பூச் சாற்றுடன் கற்கண்டு கலந்து குடித்தால் இரத்த வாந்தி நிற்கும்.
துத்தி விதைச்சூரணத்துடன்
கற்கண்டு மற்றும் தேன் கலந்து உட்கொண்டால்
மேகநோய் குணமாகும்.
இதன் இலைகளை கொதிக்கும் நீரில் வேகவைக்க வேண்டும்.
பின்னர் அந்த நீரைத் துணியில் பிழிந்து
உடல்வலி உள்ள இடங்களில் ஒற்றடம் கொடுத்தால் உடல்வலி குறையும்.
இது ஆண்மையைப் பெருக்கும் தன்மைகொண்டது.
இத்தகைய சிறப்பு வாய்ந்த துத்தியை
உணவாய் உட்கொள்வோம்!
நம் உடல்நலத்தைக் காப்போம்!

நன்றி உறவுகளே... என்றும் உங்கள் அன்பு சகோதரன்

**ஜே. அன்புரோஸ்**
நலநெறியாளன்
தொடர்பு எண் : **9360456063**